உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

நாள் :09.09.2025

அ.சா.1 -சரவணகுகன் S/o சேதுராமலிங்கம்

S.C. No. 71/2024

(சாட்சி மீண்டும் மனுவின் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் வாங்கப்பபட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

சம்பவம் நடந்த மறுநாளன்று மருத்துவமனையில் இருந்து நான் விடுவிக்கப்பட்ட பிறகு நான், அ.சா.2, அ.சா.3 மற்றும் எனது தரப்பில் உள்ளவர்கள் அனைவரும் ஆஜர் எதிரிகளின் தோப்பிற்கு சென்று அவர்களை தாக்கியதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறு மீண்டும் நாங்கள் அவர்களிடம் வம்பு வழக்க சென்றபோது தான் கையில் ஆயுதங்களை கொண்டு ஆஜர் எதிரிகளையும், அ.சா.2 சாட்சியான செல்வமணியின் சகோதரியான கருப்பாயியை தாக்குவதற்கு முற்படும்போது தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு முதல் நாளே காயம் ஏற்பட்டு, கருங்காலக்குடி அரசு மருத்துவமனை, மேலூர் அரசு மருத்துவமனை மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்து கொண்டேன். எனக்கு காயம் ஏற்படவில்லை என்பதால் தான் நான் மருத்துவமனையில் மருத்துவர் அனுமதியின்றி சொல்லாமல் கொல்லாமல் வெளியேறிவிட்டேன் என்றால் சரியல்ல. உண்மையில் எனக்கு அடிபட்டு காயம் ஏற்பட்டிருந்தால் அன்றைய தினமே காவல்நிலையத்திற்கு சென்று அ.சா.2ஆன செல்வமணி புகார் தெரிவித்திருப்பார் என்றும், அது பொய் என்பதால் தான் காயம் பட்ட அன்றே காவல்நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. என் தந்தை அ.சா.2 செல்வமணி கருங்காலக்குடி அரசு மருத்துவமனையில் என்னையும் என் தம்பியான அ.சா.3 தீபன் சக்கரவர்த்தியையும் சேர்த்து விட்டு

கொட்டாம்பட்டி காவல்நிலையத்திற்கு புகார் அளிக்க சென்றிருக்கிறார். மறுநாள் வரும்படி அறிவுறுத்தவே என் தந்தை அ.சா.2 செல்வமணி மேல்சிகிச்சைக்கு செல்வதற்காக வந்துவிட்டார். நான் தவறாக சொல்கிறேன் என்றும், என்னை மருத்துவமனையில் வந்து காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றும், என் தந்தை முதல் நாளே கொட்டாம்பட்டி காவல்நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.3 தீபன் சக்கரவர்த்திக்கு காயம் இல்லை. அவர் என்னுடன் மருத்துவமனைக்கு துணைக்கு வந்தார். எனக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் நேரடியாக கைகலப்பு ஏற்படவில்லை என்றும், நான் மற்றும் எனது தரப்பினர் முன்விரோதம் காரணமாக எதிரிகள் தரப்பை தாக்க முற்படும் போது தனக்கு தானே காயத்தை ஏற்படுத்தி கொண்டு பொய்புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் நடந்த சம்பவத்திற்கும் நேரடியாக தொடர்பில்லை என்றால் சரியல்ல. செல்வேந்திரன் என் நடுமண்டையில் அருவாளை திருப்பி வெட்டியதால் உயிர்தப்பினேன். மாற்றி வெட்டியிருந்தால் அன்றைக்கே இறந்திருப்பேன். தலையில் 7 தையல் இட்டதை சாட்சி காண்பிக்கிறார். அரிவாளை மாற்றி வெட்டியதை பற்றி என் முதல் விசாரணை வாக்குமூலத்திலோ, போலிஸ் விசாரிக்கும்போதோ கூறினேனா என்றால் சொல்லவில்லை. என்னிடம் கேட்கவில்லை என்பதால் நான் சொல்லவில்லை. அவ்வாறு சம்பவம் நடக்கவில்லை என்றும் அதனால் தான் நான் அதைபற்றி சொல்லாமல் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.09.09 17:59:51 +0530

Assistant Sessions Judge

Melur